மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) இல்லை.

(ஆ) இடமில்லை.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோபி தொகுதியில், தாசம்பாளையம் பிரிவு எல்.பி.பி. செட் அருகில் அந்தப் பாலம் இல்லாத காரணத்தினால் அங்குள்ள மக்கள் ஏறக்குறைய 10 முதல் 15 கிராமங்களிலே உள்ள மக்கள் சுமார் 10 கிலோ மீட்டர், 15 கிலோ மீட்டர் அளவிற்குச் சுற்றி வருகின்ற நிலை இருக்கிறது. எனவே, இதைப்பற்றி மீண்டும் பரிசீலனை செய்து அதைக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதிலே சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தோ அல்லது பொது மக்களெல்லாம் சேர்ந்து ஏதாவது ஒரு வைப்பு நிதியை உருவாக்கிக் கொடுப்பார்களேயானால் இத்திட்டத்தை நிறைவேற்றுவது பற்றி பொதுப் பணித் துறை ஆயும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூத்தன் கால்வாய்த் திட்டம்

*903 வினா.—திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகையிலிருந்து பிரியும் கூத்தன் கால்வாயை குண்டாற்றிலிருந்து பிரியும் கூத்தன் கால்வாயுடன் இணைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆரம்பத்தில் வைகையிலிருந்து செழுவனூர் கண்மாய் வரை கூத்தன் கால்வாய் தொடர்ச்சியாக இருந்ததா ?

(இ) கூத்தன் கால்வாய் புதுப்பிக்கப்பட்டபோது காக்கூர் கண்மாயோடு நிறுத்தப்பட்டதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும் (ஆ) இல்லை.

(இ) கூத்தன் கால்வாய் காக்கூர் கண்மாய்க்குக் கீழே தொடர்ந்து செல்லாததினால், இக் கால்வாயைப் புதுப்பிக்கும் வேலைகள் காக்கூர் கண்மாயோடு நிறுத்தப்பட்டன.

(முற்பகல் 9-50)

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகையிலிருந்து செழுவனூர் கண்மாய் வரைதான் கூத்தன் கால்வாய் ஆரம்பகாலத்தில் இருந்து வந்தது. அதனால்தான் குண்டாற்றிலிருந்து

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 27]

செழுவனூர் வரை செல்லும் கால்வாய்க்கு இன்னும் கூத்தன் கால்வாய் என்ற பெயர் உள்ளது. புதுப்பிக்கப்படும்போது, வைகையிலிருந்து காக்கூர் கண்மாயோடு புதுப்பிக்கும் பணி நிறுத்தப்பட்டுள்ளது. குண்டாறு வரை அதை இணைப்பதற்கு ஒரு கிலோமீட்டர் தானிருக்கிறது. அது இணைக்கப் படுமானால் மேலச் செழுவனூர் உட்பட சுமார் ஏழு கண்மாய்கள் பாசன வசதி பெற வாய்ப்பிருக்கிறது. ஆகவே, அரசு அந்தப் பணியை மேற்கொள்ள முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, வைகை யாற்றிலிருந்து பிரியும் கூத்தன் கால்வாய் மூன்று பிரிவுகளாகப் பிரிந்து, ஒன்று காக்கூர் கண்மாயோடும், மற்றொன்று புளியங்குடி கண்மாயோடும், மற்றொன்று, வளநாடு கண்மாயோடும் முடிவடைந்து இப்பொழுது பாசனம் நடைபெற்று வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அந்தக் கால்வாயைக் குண்டாற்றிலிருந்து பிரியும் கூத்தன் கால்வாய் எல்லாவற்றையும் இணைக்க வேண்டுமென்று இப்பொழுது கேட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டம் பயனுள்ள திட்டமாக இருக்குமேயானால், அதுவும் குறிப்பாக பிற்பட்ட, வறண்ட பகுதியான கிழக்கு முகவை மாவட்டத்திலே அது வருகின்ற காரணத்தாலே, அதற்கு முன்னுரிமை கொடுத்து, அந்தத் திட்டத்தை ஆய்வு செய்ய அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வ. சத்தியமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று ஆண்டு களுக்கு முன்பே அது பயனுள்ள திட்டம் என்று கருதி, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், அந்தக் கால்வாய் இணைப்பு செய்தாக வேண்டுமென்று அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன்மீது நீர்ப்பாசனத் துறை அதிகாரிகள் துரிதமான நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லையென்று தெரிகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான செயற் குறிப்பை அரசுக்கு அனுப்பி வைக்கும்படி சுற்றறிக்கை அனுப்பிட முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் மூலமாக நிறைவேற்றப்பட்டு அரசின் பரிசீலனைக்கு அது அனுப்பப்பட்டிருக்குமானால், பொறியாளர்களின் ஆய்வில் இருக்கும் என்றுதான் நான் நினைக்கிறேன். விரைவாக ஆய்வு அறிக்கையை அனுப்பி வைக்கும்படி அரசு கேட்டுக்கொள்ளும். அந்த அறிக்கை வந்ததற்குப் பிறகு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.